முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1206

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

17.01.2023, செவ்வாய்கிழமை

1. ஞான வள்ளலே அரங்கா வாழ்க
ஞானியர் துணைகொண்ட தேசிகா வாழ்க
வானவர்கள் போற்றும் மாதர்மத்தை
வாழங்கி வையகம் காக்கும் குருராஜனே வாழ்க
2. வாழ்க என வாழ்த்தி சுப்ரமணியர் யானும்
வழங்குவேன் அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
தாழ்விலா சுபகிருது கலை திங்கள்
(சுபகிருது வருடம் தை மாதம் 03 ம் நாள் 17.01.2023, செவ்வாய்கிழமை)
தவராஜனுக்கு சக்தி கூட எடுத்துரைப்பேன்
3. உரைக்கவே அரங்கனை நோக்கி
உயர்வான ஆறுமுகன் என் சக்தி
தயவாக இருந்து வழிநடத்தி வர
தரணியோர் அரங்கன் குடில் நோக்கி வந்தால் போதும்
4. போதுமப்பா அனைவருக்கும் ஞான சித்தி
புண்ணியவழி இனிதே அனுகக்கூடும்
கூடவே அரங்கன் சன்மார்க்க விதிகளை
குறையிலா உலகோர் தொடர்ந்து பின்பற்றி
5. நாடெங்கிலும் அரங்கன் புகழை எடுத்துச்செல்ல
ஞானலோகமாக இந்த உலகம் மாற்றம் பெறும்
ஆகவே தர்மசக்திகளின் பலம்
அகிலத்தில் எங்கும் கூடவேண்டுமாயின்
6. வகைபட அரங்கனை நோக்கி மக்கள் வந்து
வல்லமைபட சன்மார்க்க வழியில் சரணடைந்து
முருகா என அரங்கன் தர்மத்தில் பொருளுதவி செய்து
முழுமைபட ஞானத்தில் வர
7. வருகவே உலகோர்க்கு ஞானசித்தி
வல்லமைபட காரிய சித்தி
தெளிவு திடமோடு இனி பிறவாத பெரும்பேரும்
தேசிகன் அருளாலே சடுதி வாய்க்கும்

–சுபம்–